| | | |
|---|---|---|
| சாட்சி : PW 1<br>இராஜ்குமார் | அ.வ.எண். 296/2017 | 20.09.2024 |

<u>இ.ம.எண். 4/24, 5/24 அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

8) தாவா சொத்து நான் கிரையம் பெற்ற சொத்து என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.2 கிரைய பத்திரத்தின் அசல் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 அசல் ஆவணத்தை நான் தாக்கல் செய்தால் மேற்படி ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ள கூட்டுப்பட்டா விபரம் நீதிமன்றத்திற்கு தெரியவந்துவிடும் என்ற காரணத்தினால் தான் மேற்படி ஆவணத்தின் அசலை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் என்ன காரணத்திற்காக வா.சா.ஆ.2 ஆவணத்தின் அசலை தாக்கல் செய்யவில்லை என்றால் நியாபகம் இல்லை. வங்கியில் வைத்துள்ளேனா என்றால் இல்லை. நான் தாவா கிராமத்தில் பிறந்தது முதல் இருந்து வருவதால் மேற்படி கிராமத்தில் உள்ள நபர்களின் சொத்து விபரம் ஓரளவிற்கு எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. தாவா சொத்தை கிரையம் பெறும் போது யாருக்கு தாவா சொத்து பூர்வீகமாக இருந்து வந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் நாச்சாரம்மாள் பெயரில் தான் இருந்தது.

9) தாவா சொத்து நாச்சாரம்மாள் பொன்னாயிம்மாள் மற்றும் நல்லேனாள் ஆகியோருக்கு கூட்டுரிமையில் இருந்து வந்து அதன் அடிப்படையில் மேற்படி நபர்கள் பேரில் கூட்டுப்பட்டா ஏற்பட்டு மேற்படி கூட்டுப்பட்டாவில் கண்டுள்ள நாச்சாரம்மாளிடம் இருந்து தான் நான் தாவா சொத்தை கிரையம் பெற்றேன் என்றால் சரிதான், நாச்சாரம்மாள் அனுபவம் செய்து வந்த சொத்தை கிரையம் செய்து வந்தேன். தாவா சர்வே எண் என்னவென்றால்

புல எண்.164/2 ஆகும். தாவா சர்வே எண்ணில் மொத்தம் எவ்வளவு விஸ்தீரணம் என்றாலும் அதில் நான் எவ்வளவு விஸ்தீரணம் கிரையம் பெற்றேன் என்றாலும் மொத்தம் 34–1/2 செண்ட் அதில் 9 ஏர்ஸ் (22 செண்ட்) நானும் வெங்கடாசலமும் கிரையம் பெற்றேன். தாவா சொத்தை கிரையம் பெறும் போது வருவாய் துறையில் பட்டா சிட்டா உள்ளிட்ட ஆவணங்களை பார்த்து தான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். தாவா சொத்தை கிரையம் பெறும் போது நாச்சரம்மாளிடம் இருந்து கூட்டுப்பட்டா வாங்கி பார்த்தேனா அல்லது தனிப்பட்டா வாங்கி பார்த்தேனா என்றால் கூட்டுபட்டா வாங்கி பார்த்தேன். மேற்படி கூட்டுப்பட்டாவில் எத்தனை பேர் இருந்ததா என்றால் நாச்சாரம்மாள் பொன்னாயிம்மாள் மற்றும் நல்லேனாள் ஆகியோர் பெயர்கள் இருந்தது என்றால் சரிதான்.

வழக்கு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக 14.10.2024 அன்று ஒத்திவைக்கப்படுகிறது.